5th March 1968]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தலைவரவர்களே, அது பற்றிய ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

The insertion of an I. U. C. D. is a surgical procedure and cannot be done without a patien's knowledge and consent unless brute force is employed or the patient is rendered unconscious by an anaesthetic.

இது போன்ற தவறுகள் ஏற்படாமல் இனிமேல் கவனித்துக் கொள்ளப் படும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.[

III.—ADJOURNMENT MOTION *RE.* ATTACK BY UNRULY ELEMENTS ON THIRU E. V. K. SAMPATH AND TWO OTHERS.

MR. CHAIRMAN : I have received notice of a motiton under rule 43 of the Madras Legislative Council Rules given by Thiru K. Rajaram, Leader of the Opposition, for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the attack by certain unruly elements on the parties to the court proceedings and witnesses, namely, Thiruvalargal E. V. K. Sampath, Kannadasan, Jayakantan and others, who were coming out of the First Class Magistrate's Court, Madurai, and the serious injuries to one of them by the use of *arual.* I wonder how this will come under the rule governing adjournment motions. If the hon. Member can say how it comes under this rule, I shall then give my ruling.

திரு. கே. ராஜாராம் : தாங்கள் வாசித்த தீர்மானத்திலேயே விளக்கம் இருக்கிறது. இது நேற்றுதான் நடந்த விஷயம். ஆகையால், இதைப் பற்றி விவாதிப்பதற்கு சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்கக் கோருகையில், இந்த விஷயம் அப்படி ஒத்தி வைத்துப் பேசுவதற்கு தகுதி உடைய ஒன்றுகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அத்துடன் நீதி ஸ்தலங்களுக்கு முன்னுல் பயமற்ற முறையில் இப்படிப்பட்ட கலவரங்கள், கோர்ட்டுக்குப் போய் வரவே இயலாத வகையில் நடந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. கோர்ட்டுக்கு ஒரு வழக்கின் காரணமாகச் சென்றவர்கள், அந்த கோர்ட்டிலிருந்து வெளியே வரும்பொழுது இந்தக் கலவரங்கள் நடந்திருக்கின்றன. இந்தக் கலவரத்திலே யார் குற்றவாளிகள் என்பது என்னுடைய பிரச்சினை இல்லை. கலவரம் நடக்கும்பொழுது, தேவையான போலீஸ்காரர்கள் இருந்திருந்தால், இந்தக் கலவரங்கள் ஏற்படாமல் தடுத்திருக்க முடியும். தவிர, இந்தக் கூட்டம் ஒரு வழக்கு சம்மந்தமாக அதிக நேரமாகக் கூடியிருக்கிறார்கள். இரு கட்சியின் தரப்பிலும் ஒரு 3,000 பேர் கூடியிருக்கலாம் என்று தெரிய வருகிறது. இந்த மாதிரி கலவரம் ஏற்படலாம் என்று போலீஸ்காரர்கள் எதிர்பார்த்து இதைத் தடுப்பதற்கான முஸ்தீபுகளைச் செய்து, அதிக போலீஸ்காரர்களை அந்த இடத்திலே நிறுத்தி வைத்திருப்பார்களேயானுல், இதைத் தடுத்திருக்க முடியும். ஆகவே, இப்படி கூட்டம் கூடும் இடத்திலே ஒரு கலவரம் வரலாம் என்று தெரிந்திருந்தும், இந்தப் போலீஸ் அதைத் தடுக்காமல் இருந்துவிட்டது என்பதுதான் குற்றச்சாட்டு. இந்த விஷயம் மிகவும் அவசரமானது. இந்த மாதிரி தடுத்திருக்கக் கூடிய ஒரு குற்றத்தைத் தடுக்காமல் விட்டதால், பெரிய விளைவுகள் ஏற்பட்டுவிட்டன. இதனுல் பொது ஜனங்களிடையே ஒரு பீதி ஏற்பட்டு, அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது. இந்த மாதிரி, சாதாரண மக்கள் கோர்ட்டுகளுக்குக் கூட போக முடியாத நிலைமை மாகாணத்திலேயே இரண்டாவது பெரிய நகரமாக 3-30 p.m.

இருக்கக்கூடிய மதுரை நகரத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பது வருந்தக் கூடிய ஒரு விஷயம் ஆகும். ஆகவே இதைப்பற்றி விவாதிக்க இந்த சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மிகவும் அவசரமானது. இந்தக் கலவரத்தின் காரணமாக ஒருவர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப் பட்டிருக்கிறார். அந்தக் கலவரத்திலே, அரிவாளைக் கொண்டு வெட்டப் பட்டும் தடி கொண்டு தாக்கப்பட்டும் இருக்கிறார்கள். எனவே, இந்தப் பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று சபைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிக்க எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த விஷயத்திலே ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது மதுரையிலே நடைபெற்ற நிகழ்ச்சியாகும். உள்ளபடியே இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், இது மிகவும் வருந்தக் கூடிய ஒன்றுதான். அந்த கோர்ட்டிலே நடைபெற இருக்கும் வழக்கிலே சம்பந்தப்பட்டவர்களும், அந்த வழக்கு நடப்பதைப் பார்ப்பதற்காக இரு கட்சியைச் சேர்ந்தவர்களும், அவரவர்கள் அனுதாபிகளும் கோர்ட்டுக்கு முன்னாலே கூடியிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தை எதிர்பார்த்து, ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டு விடக்கூடும் என்று கருதி, ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் தலைமையிலே போதுமான அளவுக்கு எவ்வளவு காவல்காரர்கள் வர முடியுமோ, அந்த அளவுக்கு அங்கு வந்திருக்கிறார்கள். ஆனால், இரு தரப்பைச் சார்ந்த மக்களும் அங்கே கூட்டமாக கூடிக்கொண்டு வழக்குக்குச் சென்றவர்கள் வரும்வரை காத்திருந்திருக்கிறார்கள். வழக்கு முடிந்து வெளியே வரும்பொழுது, இரு தரப்பினரும் முழக்கங்களும், மாற்று முழக்கங்களும் போட்டதன் காரணமாக ஒரு சிறு கலவரம் ஏற்பட்டு, அந்த சந்தடியிலே பக்கத்திலே நிறுத்தி வைக்கப்பட்ட கார்களின்மீது கற்கள் எடுத்துப் போடப்பட்டிருக்கின்றன. இந்த சம்பவத்தின் காரணமாக, மேற்கு வெளி வீதியிலே ஒருவர் வெட்டப்படுகின்ற சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், தீர்மானத்திலே குறிப்பிடப்பட்டு உள்ளவாறு கண்ணதாசன், சம்பத், ஜெயகாந்தன் போன்றவர்கள் அடிபடவில்லை. அங்கிருந்த போலீசார் நிலைமையை நன்றாக சமாளித்ததன் காரணமாகத்தான் அது இந்த அளவிலே முடிந்திருக்கிறது ; இல்லை என்றால், இன்னும் மோசமாகப் போயிருக்கக் கூடும். இதன் காரணமாக காலிலே வெட்டப்பட்ட ஒருவர் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், இந்த சம்பவங்கள் நடப்பதற்கு முன்னாலேயே, திரு. கண்ணதாசன் அவர்கள் இந்த வழக்கை கவனிப்பதற்காக பொது மக்கள் ஏராளமான பேர் வரவேண்டுமென்று கூட்டங்களிலே பேசும் பொழுது ஒரு அறிக்கையே விட்டிருக்கிறார். எனவே, அங்கு வந்திருந்த இரு தரப்பினரும் கோஷங்களைப் பரிமாறிக் கொண்டிருந்திருக்கிறார்கள். இப்படி அறிக்கை விட்டதனால் தான் இந்த சூழ்நிலை ஏற்பட்டு, கலவரங்கள் வேறு நடந்திருக்கின்றன என்று நாம் கருத வேண்டியிருக்கிறது. போலீசார் நிலைமைக்கு ஏற்றவாறு சமாளித்து, நியாயப்படி செய்ய வேண்டிய காரியங்களை உடனே செய்திருக்கிறார்கள். வேலு என்ற நபர் மீதும், அவரோடு சேர்ந்து 3 பேர் மீதும் செக்ஷன் 341, 322 Cr. P. C. read with 34, I. P. C. என்பதன் பேரில் ஒரு வழக்கும், அதே போல் 141, 341, 323 Cr P. C. இன்னொரு எதிர் வழக்கும் தொடரப்பட்டு இரண்டு வழக்குகளும் போலீஸ் விசாரணையில் இருந்துகொண்டிருக்கின்றன. இதன் காரணமாக எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும், மற்றும் முக்கியமான நபர்களையும் கூட்டி வைத்து, இந்த சம்பவம் நடந்ததின் காரணமாக பொது மக்களுக்கும், அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் எந்த விதமான தீங்கும், துன்பமும் ஏற்படாமல் இருப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்லும் நிலைமையிலே, இன்று மாலை இரண்டு மணிக்கு ஒரு கூட்டம் மதுரையிலே கூட்டப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட முயற்சியிலே நல்ல விளைவுகள் ஏற்பட வேண்டுமென்று நாம் எல்லாம் விரும்புகிறோம். ஆகவே, இந்த விஷயத்திலே முறைப்படியான அன்றாட சட்ட ஒழுங்குக்கு உட்பட்ட நடவடிக்கைகளை

போலீசார் எடுத்திருப்பதாலும், இந்த அவையின் அலுவலை ஒத்திவைத்துப் பேசும் அளவுக்கு இந்த விஷயம் இல்லை என்பதாலும், இது ஒத்திவைப்பு பிரேரணையின் கீழே வரவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். இது பற்றி இன்னும் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், இந்த அரசாங்கம் அதிலே கவனம் செலுத்தும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் எனக்கு அவ்வளவு திருப்திகரமாக இல்லை. இரு தரப்பைச் சார்ந்த மக்கள் ஒரு இடத்திலே சேர்ந்திருக்கிறார்கள் என்று தெரியவரும் பொழுது, ஏதாவது கலவரம் வரும் என்பதை போலீசார் ஏற்கனவே எதிர்பார்த்திருக்கிறார்கள். மேலும், கூடி இருந்தவர்கள் கோஷங்களும், எதிர் கோஷங்களும் போட்டுக் கொண்டிருக்கும் பொழுது, பக்கத்திலேயே டெலிபோன் வசதி வேறு இருந்திருக்கிறது. பக்கத்திலேயே போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. எனவே, இவர்கள் நிலைமையை நல்ல முறையிலே சமாளிக்க நினைத்திருந்தால், வேண்டிய போலீஸ்காரர்களைத் தருவித்து, இந்த கலவரங்களை நடைபெறாமல் தடுத்திருக்க முடியும். ஒரு லாரி போலீஸ்காரர்களையே இவர்கள் தருவிப்பதற்கு வேண்டிய நேரம் இருந்திருக்கிறது. மேலும், அங்கு கூடி இருந்த மக்கள் அரை மணி நேரம், ஒரு மணி நேரம் இப்படிப்பட்ட முறையிலே கூச்சல் போட்டதாகச் சொல்லப்படுகிறது. எனவே, போலீசார் நினைத்திருந்தால், தகுந்த நடவடிக்கைகளை எடுத்து அந்தக் கலவரங்களை முன் கூட்டியே தடுத்திருக்க முடியும் என்றுதான் நான் நினைக்கிறேன். ஆகவே, இதை விவாதிக்க இந்த சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : I have heard the view point of the hon. the Leader of the Opposition and also the view point of the Government. A motion to adjourn the business of the House to discuss a definite matter of urgent public importance must come strictly under the rules. The matter should involve more than the ordinary administration of law. The incidents mentioned in the notice do not involve more than the ordinary administration of law. In view of this, I withhold consent to raise the matter further.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் இந்த நேரத்திலே நீங்கள் ஒரு தீர்ப்பைக் கூறிவிட்டாலும்கூட—எதிர் கட்சித் தலைவரிடத்திலே ஒரு குறிக்கோளை நம் நாட்டு நன்மைக்காக விடுகிறேன். பத்திரிகையிலே எழுதப்பட்ட எழுத்தையும், அது சம்பந்தமாக வழக்கு போடுவதற்கு சாதகமாக இருந்த அவ்வெழுத்துக்களையும் மக்கள் என்னவென்று புரிந்து கொண்டிருப்பார்கள். அதோடு, இந்த வழக்கைப் பற்றியும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதாவது, எதற்காக இந்த வழக்கு போடப்பட்டது, யார் யார் இந்த வழக்கிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதும் தெரியும். இந்த நிலைமையிலே வழக்கு நடைபெறும் பொழுது வீண் சொற்போர் இரு தரப்பிலேயும் ஏற்பட்டிருக்கிறது ; இதன் காரணமாக மக்களிடையே ஒரு கொதிப்பும் இருந்திருக்கிறது. இந்த நேரத்திலே அதிலே சம்மந்தப்பட்ட திரு. கண்ணதாசன் அவர்கள் மறு நாளே ஒரு பத்திரிக்கை ஒன்றிலே ஒரு அறிக்கை விட்டு, பொது மக்கள் எல்லாம் இந்த வழக்கைப் பார்ப்பதர்கு ஏராளமான பேர் வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இதனால்தான் ஒரு பெரிய கூட்டம் நீதி மன்றத்தின் முன் கூடியிருக்கிறது. அதன் காரணமாக அந்த சம்பவம் நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் வராமல் எதிர்க் கட்சித் தலைவர் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

15th March 1968

IV.—CALLING ATTENTION TO FAILURE OF GOVERNMENT TO FIX SALARY OF SANSYRIT PANDITS IN BOARD HIGH SCHOOLS IN MADURAI DISTRICT

THIRU G. KRISHNAMOORTHY : Mr. Chairman, Sir, with your kind and special prior permission, on behalf of Thiru M. Rajah Iyer, I wish to call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the failure of the Government to fix the salary of Sanskrit Pandits serving in the (former) Board High Schools in the Madurai district since 1st June 1960.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, It has been reported that there are no cases relating to non-fixation of pay of Sanskrit Pandits serving in the former District Board High Schools in Madurai district since 1st June 1960 except in respect of one Thiru K. R. Venkatasubramania Sastrigal. This teacher was employed originally in a private school as Sanskrit Pandit prior to and on 1st January 1948. He entered the District Board service in the High School at Batlaguntu from 1951. It was represented to Government that his pay was not correctly fixed by the then Madurai District Board authorities in the then scale of Rs. 60-4-120. The pay of Pandits, Grade I, was revised at the time of general revision of scales of pay in 1960, as Rs. 140—5—180—10—250, but the teacher did not get full benefits of fixation at the correct stage due to the wrong fixation of his pay in 1951 by the Madurai Dist ict Board.

His representation is under consideration of the Government in consultation with the Director of School Education. Various details have to be collected before the case is finalised. Orders will be issued as early as possible.

V.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1968-69—*cont.*

3-40 p.m. * THIRUMATHI MARY C. CLUBWALA JADHAV : Chairman, Sir, I rise to congratulate the Chief Minister of Madras and his Cabinet on a progressive year of service in Madras State. This year has shown a great increase in food production. The bumper yield, the initiation of two crops of paddy in Thanjavur district and also crops in other areas have yielded good harvest. The food situation has greatly improved specially in rice and Madras State is now able to supply rice to our neighbouring State, Kerala.

I also congratulate the Chief Minister on giving a balanced revenue budget without any recourse to additional taxes and this indeed is a matter for satisfaction.

Madras State has had a wondrous year in the last two months. It has become the epicentre of International events. The Second International Tamil Conference brought a large crowd unprecedented to Madras and there was a large delegation of 430, of whom over 200 were foreign delegates from 40 countries of the world. The City became the hub of cultural, historical and educational meets and the ancient Tamil Language in all its beauty, grace and